# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. - பீ 3/92 II.

### 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 64 ஆம் பிரிவின் கீழ், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
1997 திசெம்பர் 16.

ஒழுங்குவிதி

1997 சனவரி 10 ஆந் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானியில் திருத்தப்பட்டவாறான 1993 நவெம்பர் 26 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சுரங்கத்தொழில் (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

(1) அதற்கான ஐந்தாம் ஒழுங்குவிதியின் (7) ஆம் பந்தியில் "அல்லது கனிப்பொருள்வள ஆய்வு உரிமமொன்றாக மாற்றப்படுவதற்கு ஏதுவாதல் வேண்டும்." எனும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :-

"ஏதுவாதல் வேண்டும் :

ஆயின் வர்த்தக உற்பத்தியை ஆரம்பிப்பதற்கான மேலதிக காலப்பகுதி, முதலீட்டு உடன்படிக்கையின் நியதிகளுடன் இணங்கிப் பேசிக்கொள்ளப்படலாம்." ; அத்துடன்

(2) அதற்கான ஒழுங்குவிதி 42 ல் "கைத்தொழில் கனிப்பொருள்கள்" என்பதன் வரைவிலக்கணத்தில் "அபடைட், மக்னெடைட்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அபடைட் மற்றும் வேறு பொசுபேற்றுக் கனிப்பொருட்கள், மக்னெடைட்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

01 – 63

# PART I : SECTION (I) – GENERAL

## Government Notifications

L.D. – B. 3/92 II

### THE MINES AND MINERALS ACT, No. 33 OF 1992

REGULATION made by the Minister of Industrial Development under Section 64 read with Section 34 of the Mines and Minerals Act, No. 33 of 1992.

Minister of Industrial Development.

Colombo,
16th December, 1997.

**Regulation**

The Mining (Licensing) Regulation, No. 1 of 1993 published in *Gazette Extraordinary* No. 794/23 of 26th November, 1993 as amended by *Gazette* No. 958 of 10th January, 1997 are hereby further amended as follows:–

(1) in paragraph (7) of Regulation 5 thereof by the substitution for the words "terminated or reverted to that of an exploration licence by the Bureau" of the following words –
"terminated by the Bureau :

Provided that an additional period of time to commence commercial production may be negotiated in accordance with the terms of an Investment Agreement" ; and

(2) In Regulation 42 thereof by the substitution in the definition of "industrial minerals" for the words "apatite, magnetite" of the words "apatite and other phosphate minerals, magnetite".

01–63

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුවේ මුද්‍රණය කරන ලදී.